செய்தி வெளியீடு எண். 195 நாள்: 07.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 1-ம் தேதி முதல் வழங்கப்பட்டு வரும் பயிர்கடன்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களுக்கு பயிர்கடன்களை அனுமதித்துள்ளது. இதன்படி மத்திய கூட்டுறவு வங்கி கிளை மூலமாக பயிர்கடன் பெறும் விவசாய உறுப்பினர்களின் பெயரில் துவங்கப்பட்ட சேமிப்பு கணக்கு வாயிலாக ரொக்க தொகை இந்திய ரிசர்வ் வங்கியால் அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பிற்குட்பட்டு வழங்கப்படும். தற்போது மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளில் விவசாயிகளின் பெயரில் கணக்கு ஒன்றை துவங்கி பயிர் கடனுக்கான ரொக்கப்பகுதி வழங்கப்படுகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க விவசாய கடன் பெறும் உறுப்பினர்கள் மத்திய கூட்டுறவு வங்கியின் கிளைக்கு சென்று அவர்களின் கணக்கிலிருந்து பயிர் கடன் தொகை பெறுவதற்கு காலநேரம் விரயமாவதுடன் மிகவும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கடன் வழங்குவதை விரைவுப்படுத்துவதற்காகவும், வங்கிகளின் தனிநபர் சேமிப்பு கணக்கிலிருந்து வாரத்திற்கு ரூ. 50000/- வரை வழங்கப்பட வேண்டும் என்ற உச்சவரம்பு நிர்ணயம் செய்ததனை, இந்திய ரிசர்வ் வங்கி சுற்றறிக்கையின்படி உச்சவரம்பை முற்றிலுமாக தளர்த்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக வங்கிகள் சேமிப்பு கணக்கிலிருந்து வாடிக்கையாளர்களுக்கு எவ்வித உச்சவரம்பின்றி பணம் வழங்கி வருவதை கருத்தில் கொண்டு விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டும் கடந்த 1-ம் தேதி முதல் விவசாயிகளுக்கு தற்போது அவர்கள் உறுப்பினர்களாக உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திலேயே ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி விவசாய பயிர்கடன் தொகை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~